பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 32 செவ்வாய்கிழமை 16.07.2024 கதிர் 251

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் நேற்றுடன் நிறைவு

## மொத்தம் 52 மனித எச்சங்கள் மீட்பு

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வின், பத்தாம் நாள் செயற்பாடுகள் நேற்றும் தொடர்ச்சியாக இடம்பெற்றது. இதில் 5 மனித எலுப்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அகழ்வின் 10ஆவது நாளான நேற்று துப்பாக்கி சன்னம், திறப்பு கோர்வை என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. முதல் இரண்டு கட்டங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட 40 மனித எச்சங்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்டத்தில் நேற்று வரை 12 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் ☞2

# இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு இத்தனை ஆண்டுகள் கடந்து இந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் ஜூலை 21 பி.ப 3.00 மணிக்கு இந்த மாநாடு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தேசிய மாநாடு நடைபெறவுள்ளது.

இதில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால், இந்த மாநாட்டின் முதன்மை அதிதியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனே கலந்துகொள்ளவுள்ளார் என்பதுதான். அவர் ஏன் அதிதியாக அழைக்கப்பட்டார் என்பது பற்றி கட்சி விளக்கப்படவில்லை. தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமைக்காகத் தான் உழைக்கத் தயார் என்று சொல்வதன் காரணமாக அவர் அழைக்கப்பட்டாரோ என்பதும் உறுதியாகத் தெரியவில்லை.

மற்றொரு வகையில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவே ☞2

# மைத்திரிக்கு நீதிமன்றம் காலக்கெடு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை ஓகஸ்ட் 30க்கு முன்னர் செலுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டீ. நவாஸ், குமுதுனி விக்ரமசிங்க, ஷிரான் குணரத்ன, அசல வெங்கப்புலி ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பல்கலை ஊழியர் போராட்டம் நேற்று முடிவடைந்தது

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் தொழிற்சங்கம் முன்னெடுத்த வேலை நிறுத்தம் நேற்று நிறைவுக்கு வந்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் உயர் கல்வி அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து இந்த வேலை நிறுத்தத்தைத் தற்காலிகமாக கைவிட தீர்மானித்துள்ளதாக தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

மே 2 முதல் தமக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, ☞2

# 13இன் நடைமுறை குறித்து செல்வத்திற்கு சஜித் உறுதி

## மன்னாரில் நேரில் சந்தித்து வழங்கினார்

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மன்னாருக்குச் சென்றிருந்த அவர் ரெலோ அலுவலகத்தில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனைச் சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் உள்ளது. அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன். அதில் எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை.

மன்னார் பகுதியில் உள்ள மீனவர்கள் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். விசேடமாக சட்டவிரோதமான மீன்பிடி முறைமைகளால் அவர்கள் இன்னல்களுக்கு முகங்கொடுகின்றனர். மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினை வழங்குவதற்கு ☞2

# தேர்தலை நிறுத்தக் கோரிய மனு விசாரணை இன்றியே தள்ளுபடி

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுவது அரசமைப்பிற்கு முரணானது என தீர்ப்பு வழங்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே தள்ளுபடி செய்ய உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2015ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கமைய, அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அதனை மக்கள் கருத்துக்கணிப்பினூடாக நிறைவேற்றுவது அவசியமென குறிப்பிடப்படவில்லை எனவும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் மீளவும் வலியுறுத்தியுள்ளது.

இந்த வழக்குக்கான 5இலட்சம் ரூபா செலவை மனுதாரர் செலுத்த வேண்டுமெனவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான அர்ஜுன ஒபேசேகர, பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் ☞8

# சட்டம் ஒழுங்கை காக்க முடியாத ஆளும் தரப்பினால் பயனில்லை

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியாத ஆளும் தரப்பினரால் எந்தப் பயனுமில்லை என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

தேசிய மத்தியஸ்த தினத்தை முன்னிட்டு இலங்கை மன்ற கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மத்தியஸ் சபை 1958 காலப் பகுதியில் எமது நாட்டில் அறிமுகப்படுத்தியபோதும் அது வெற்றியளிக்காதபோது, அந்த நடவடிக்கை நிராகரிக்கப்பட்டது. பின்னர் 1988இல் மீண்டும் மத்தியஸ்த சபை சட்டம் கொண்டுவரப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரை மத்தியஸ்த சபை இயங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஜூலை 18 தேசிய மத்தியஸ்த தினம் கொண்டாடப்படுகிறது.

நாடொன்றில் மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாப்பது அந்த நாட்டு அரசின் கடமையாகும். நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கே மக்கள் ஆளும் தரப்பு ஒன்றைத் தெரிவு செய்கின்றனர். அந்த ஆளும் தரப்பால் மக்களின் உயிர் உடைமைகளை பாதுகாக்க முடியாவிட்டால் அதனால் பயனில்லை.

சமூகத்தில் முரண்பாடுகள் ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை ஆளும் தரப்பு மேற்கொள்ளவேண்டும். ஏகாதிபத்திய நாடுகளில் வன்முறைகளை ஏதாவது ஒருவழியில் இலகுவாகத் தடுக்க முடியும். ஆனால் ஜனநாயக நாடுகளில் அதனை அவ்வாறு செய்ய முடியாது. ☞2

# ஏற்றுமதிசார் விவசாயத்தில் 2024 தெளிவான வளர்ச்சி

## அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாய மற்றும் ☞2

# நாடாளுமன்றின் அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக்கூடாது

## ஜனாதிபதி கண்டிப்பாகத் தெரிவிப்பு

நீதித்துறையின் அதிகாரம் நாடாளுமன்றத்தில் உள்ளது என்பதை நினைவுபடுத்திய ஜனாதிபதி, நாடாளுமன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக்கூடாது ☞8

# 2022இல் கூடாரமிட்டு போராடியோர் போதைப்பொருள் பாவனையாளர்கள்

## இப்படிச் கூறுகின்றார் எஸ்.பி.திஸநாயக்க

2022ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக கூடாரமிட்டுப்போராட்டம் நடத்தியவர்களை போதைப்பொருள் பாவனையாளர்கள் என்றும் அவர்கள் தேசிய பாதுகாப்பையும் சட்டவாட்சியையும் கேள்விக்குள்ளாக்கினார்கள் ☞8

# மின்கட்டணங்கள் இன்று 22.5 வீதத்தால் குறைப்பு

மின்கட்டணத்தை 22.5 சதவீதத்தால் குறைப்பதற்கு இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. புதிய கட்டணத் திருத்தத்தை இன்று முதல் அமுல்படுத்துமாறு ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்தி ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தொடரவேண்டும் என்று திட்டவட்டமான நிலைப்பாட்டில் இருக்கிறார் விக்னேஸ்வரன். வடக்கில் தமிழ் பொது வேட்பாளர் என்று தனியாக ஒரு அரசியல் ஓட்டம்ஓடினாலும்ரணிலுக்குத்தான் தனது ஆதரவு என்று அவர் பல தடவைகள் கூறியிருக்கிறார். அதாவது, ரணிலின் ஆட்சி தொடர்ந்தால்தான் பொருளாதார ரீதியில்நல்லதுஎன்பதால்ரணிலைத் தான் ஆதரிக்கிறார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தப்பின்னணியில்ரணிலுக்கு தமிழ் அரசுக் கட்சிக்குள் ஆதரவு திரட்டும் முயற்சியாக சிறீதரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்குமோ என்கிற சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் இருக்கவே செய்கிறது.

மற்றொருபுறத்தில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து தமிழ் மக்கள் பொதுச் சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் எல்லாம் கையெழுத்துப் போடப் போகின்றோம்என்றுஅறிக்கைவிட்ட ரெலோ, ஈபிஆர்எல்எவ். ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றினை கொழும்புக்கு அழைத்து இந்தியத் தூதுவர் ஒரு 'டோஸ்' கொடுத்ததைத் தொடர்ந்து, நேற்று சஜித் பிரேமதாசவைச் சந்தித்திருக்கிறார் செல்வம் அடைக்கலநாதன்.

சஜித் யாழ்ப்பாணம் வந்தபோது தமிழ் அரசுக் கட்சியைச் சந்தித்துப் பேசினார். அதேபோல்மன்னாருக்குப் போனபோது செல்வத்துடன் பேசினார் எனற வகையில் இதனைக் கடந்துசெல்ல முடியாது. ஏனெனில் வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளைப் பார்த்துவிட்டுத்தான் ஜனாதிபதித் தேர்தல் குறித்த இறுதி முடிவை எடுப்போம் என்று அறிவித்த தமிழ் அரசுக் கட்சியை சஜித் சந்திப்பதுவேறு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக தெற்கில் நிற்கக்கூடிய எவரும் தமிழர்களுக்குத் தீர்வு தரமாட்டார்கள் என்பதால் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவோம் என்று அறிவித்துவிட்டு ரெலோ தலைவர்சஜித்தைச்சந்திப்பதுவேறு.

இத்தகைய அரசியல் தலைவர்களை நம்பி களத்தில் இறங்கிய தமிழ் மக்கள் பொதுச் சபையினரை நினைத்தால்தர் பரிதாபமாக இருக்கிறது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## கொக்குத்தொடுவாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட குழுவினர், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிசார், சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன், கிராம சேவையாளர் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் பத்தாம் நாள் அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தன.

இது தொடர்பாக விஷேட சட்ட வைத்திய நிபுணர் கனகசபாபதி வாசுதேவ தெரிவித்ததாவது:

மூன்றாம் கட்டமாக தொடர்ந்த கொக்குதொடுவாய் மனிதபுதைகுழி அகழ்வானது பத்தாவது நாளாகவும் நடைபெற்றது. இன்றுடன் அநேகமாக மனித புதைகுழியில் கிடந்த எலும்பு தொகுதிகள் முழுக்க மீட்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக இதுவரை 52 மனித எலும்பு தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் இன்றையதினம் துப்பாக்கி சன்னம், திறப்பு கோர்வைகள் என்பன மேலதிக சான்றாதார பொருட்களாகப் பெறப்பட்டுள்ளன. அடுத்துவரும் நாட்களில் இப்புதைகுழி தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரும்.

2023 ஜூன்மாதம் 29 அன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தினை அகழ்ந்தபோது மனித எச்சங்கள் காணப்பட்டதை அடுத்து நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு இந்தப் புதைகுழி-யைத் தோண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழியில் அகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புபோராளிகள்பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் இந்தப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டிருந்தன.

இரண்டாங்கட்ட அகழ்வின்போது குறித்த மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவிமூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதான வீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும்பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த மனிதப் புதைகுழி அகழ்வாய்விற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் ஆய்வு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. ஆய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீளவும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் மூன்றாம் கட்டப்பணிகள் 04.07.2024 அன்று ஆரம்பமாகி பத்து நாள்கள் அகழ்வுகளுடன் நிறைவு பெற்றுள்ளது.

## 13ஐ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்த்துள்ளோம்.

வடபகுதி மக்களின் அரசியல், பொருளாதார அடிப்படை மனித உரிமைகளைப் பாதகாப்பதற்காக நாங்கள் பாடுபடவுள்ளோம். அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளோம். இன, மதத்தினை முன்னிறுத்தி நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. அனைவரும் ஒருதாய் மக்கள் என்ற அடிப்படையில் தான் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்றார்

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டு வந்த குறித்த பணிப்புறக்கணிப்பு 75 நாட்களின் பின் நிறைவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2022இல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியில் நாடு வங்குரோத்துநிலையடையவில்லை என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஏற்றுக் கொள்ளவேண்டும். நெருக்கடியான சூழ்நிலையில் ஆளும் தரப்பைப் பொறுப்பேற்று சவால்களை வெற்றி கொண்டவர் ரணில்.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின்பின்னரான பொருளாதார தாக்கத்தை ஒரு தரப்பினர் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தனர். ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக போதைப்பொருள் பாவனையாளர்கள் கூடாரமிட்டு தேசிய பாதுகாப்பையும் சட்டவாட்சியையும் கேள்விக்குள்ளாக்கினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022ஆம் ஆண்டு போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வராமலிருந்திருந்தால் நாடுமிகமோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும். போராட்டக் காரர்கள் என்று குறிப்பிட்டுக்கொண்டு பயங்கரவாதிகளைப் போன்று செயற்பட்டவர்களை அடக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனியார் வியாபாரிகளை கண்டு அச்சமடையப் போவதில்லை.

ஜனாதிபதியின் சிறந்த திட்டங்களினால் குறுகிய காலத்தில் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுள்ளது. தற்போதைய முன்னேற்றங்களை தொடர வேண்டுமாயின் நாட்டின் எதிர்காலத்துக்காகவேனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆளும்தரப்பு தோற்றம்பெற வேண்டும் - என்றார்.

## சட்டம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகள் இருக்கின்றன.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இருந்து மத்தியஸ்த சபை முறை இருந்துவருகிறது. 1215ஆம் ஆண்டு அப்போதைய அரசர்களுக்கும் மக்களுக்கும் முரண்பாடுகள் வரும்போது அதனை தீர்ப்பதற்கே மத்தியஸ்த சபை அமைக்கப்பட்டது. அன்று முதல் அந்த நடவடிக்கை உலகில் ஜனநாயக நாடுகளில் இருந்து வருகிறது. மக்களுக்கு நீதியை நிராகரிப்பதும் நீதியை தாமதிப்பதும் கூடாது. அவ்வாறு இடம்பெற்றால் அது. ஏதாவது ஒரு இடத்தில் வெடிக்கும். 2022இல் எமது நாட்டில் ஏற்பட்ட மக்கள் போராட்டம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அதனால் மக்கள் மத்தியில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். சமாதானம், ஐக்கியம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆளும் தரப்பு நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தால், அந்த நாடு தானாக வளர்ச்சியடையும். தேர்தல் காலம் வரும்போது லீக்வான் யூ. மஹதீர் மொஹமத் போன்றவர்களின் பெயர்களை தெரிவிக்கின்றனர். அவர்கள் நாட்டை முன்னேற்றவில்லை. மாறாக அவர்கள் நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தார்கள். இதன் மூலம் அந்த நாட்டு விவசாயிகள் நாட்டை வளப்படுத்தினார்கள். இன்றும் சிங்கப்பூரில் ஒரு மனிதன் எத்தனை மில்லியன் ரூபாவையும் கையில் எடுத்துக்கொண்டு எங்குவேண்டுமானாலும் சென்றுவர முடியும். அந்த நிலைமை எமது நாட்டில் இல்லை.

எனவே சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பது, செலவினங்களைக் குறைப்பதும் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துகொடுப்பது நாட்டை ஆட்சி செய்யும் ஆளும்தரப்பின் கடமையாகும். சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்காவிட்டால்தான் நாட்டுக்குள் கொலை, கொள்ளை என்பன தலைதூக்கும். சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முடியாத ஆளும் தரப்பினால் எந்த பயனும் இல்லை - என்றார்.

## ஏற்றுமதிசார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி தெரிவித்தார்.

'இரண்டுவருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் பி.எல்.ஏ.ஜே. தர்மகீர்த்தி இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்;

2022 உடன் ஒப்பிடும்போது, 2023 இல் விவசாய ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளது. அதன்படி எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகள் காரணமாக 2024 இன் முதல் ஆறு மாதங்களில் விவசாய ஏற்றுமதித் துறையில் தெளிவான வளர்ச்சியை உருவாக்க முடிந்தது.

இக்காலத்தில் நிலவிய காலநிலை விவசாயத்துக்கு சாதகமாக இல்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட வேண்டும். இத்தகைய சவால்களை எதிர்கொண்டும் அடைந்த முன்னேற்றம் உண்மையில் வெற்றியாகும்.

உதாரணமாக, 2023 ஏப்ரல் மாதமாகும்போது, தேயிலை மூலம் கிடைத்த 407.6 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானம், 2024 ஏப்ரல் மாத்தில் 450.5 மில்லியனாக அதிகரித்துள்ளது.

2023 ஏப்ரல் மாதத்திற்குள் தேங்காய் ஏற்றுமதி மூலம் 212 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்தது. அது 2024 ஏப்ரல் மாதமாகும்போது 263 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

2023 ஏப்ரல் மாதத்தில் 299 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2024 ஏப்ரல் இல் 335 மில்லியனாக அதிகரித்துள்ளது.

இதேகாலப்பகுதியில் கறுவா ஏற்றுமதி வருமானம் 53.3 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 56.1 மில்லியனாகவும், மிளகு ஏற்றுமதி வருமானம் 13.3 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 14 மில்லியனாகவும் அதிகரித்துள்ளது.

விவசாயமானது தொடர்ந்து ஏற்ற இறக்கம் ஏற்படும் துறையாகும். கடந்த காலத்தில் தேயிலை உற்பத்தி குறைந்ததால் உரத்தின் தேவை அதிகரித்தது. அதன்படி உரம் வழங்கும் விசேட வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். ஒவ்வொரு 50 கிலோ உர மூட்டைக்கும் 2000 ரூபாய் மானியத்தில் உரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

தற்போது, 10,000 மெட்ரிக் தொன் தேயிலை உரம் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது. எஞ்சிய 20,000 மெட்ரிக் தொன் மேற்குறிப்பிட்ட தரப்பினருக்கு மேலதிகமாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களை இணைத்துக்கொண்டு, உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மொத்தமாக தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 2022ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 745 ஹெக்டேயரில் தேயிலை மீள் நடுதல் மற்றும் நேரடி பயிர்ச்செய்கை தொடர்பான மானியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன் கீழ் 324 விவசாயிகளுக்கு 140 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கு 60 மில்லியன் ரூபாயை ஒதுக்கி 800,000 தேயிலை செடிகளை நடும் புதிய திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கை தேயிலைச் சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை நேரடி தேயிலை பயிர்ச்செய்கை திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதற்காக 750 மில்லியன் ரூபாய் பயன்படுத்தப்படவுள்ளது.

தற்போது, தேங்காய் சிரட்டை மற்றும் தேங்காய் மட்டை சார்ந்த உற்பத்திகளும் இந்நாட்டிற்கு வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித் தருகின்றது. 2022 ஆம் ஆண்டில், தேங்காய் சார்ந்த ஏற்றுமதி மூலம் 817 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது.

2023 ஆம் ஆண்டில், வெள்ளைப்பூஞ்சு நோய் காரணமாக தேங்காய் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டாலும் கூட, சரியான ஒழுங்குபடுத்தல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பயன்படுத்தியன் ஊடாக 700 மில்லியன் அமெரிக்க டொலரை நாட்டிற்கு வருமானமாகக் கொண்டு வர முடிந்தது. 2024 ஏப்ரல் மாத நிலவரப்படி, 263.06 மில்லியன் அமெரிக்க டொலர் ஈட்டப்பட்டுள்ளதுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 24% வளர்ச்சியாகும்.

2022, 2023ஆம் ஆண்டுகளில் பயிரிடப்பட்ட, புதிய இறப்பர் பயிர் பரப்பளவு 921 ஹெக்டேயராகவும், மீள் நடவு செய்யப்பட்ட இறப்பர் பரப்பளவு 2,743 ஹெக்டேயராகவும் உள்ளது. 2024 இல் 1135 ஹெக்டேயர் இறப்பரைப் பயிரிட திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அதில், 605 ஹெக்டேயரில் புதிதாகப் பயிரிடலும், 415 ஹெக்டேரில் மீள்நடுகையும் செய்யப்படும். இதற்காக பயிர்ச்செய்கைக்குத் தேவையான செடிகளை வழங்குவதற்கு 149 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முன்னர் காணப்பட்ட இறப்பர் விவசாய மானிய முறை 2023 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படாது. மேலும் 2023 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளுக்கு மானியமாக திணைக்களம் இலவசமாக செடிகளை வழங்குகின்றது - என்றார்.

## மின்கட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது.

மின்கட்டணம் குறைவடைந்துள்ளது என்பதற்காக மின்சாரத்தை வீண்விரயம் செய்வதை தவிர்த்துக் கொண்டு மின்சாரத்தை சிக்கனமாக பாவிக்குமாறு ஆணைக்குழு மின்பாவனையாளர்களிடம் வலியுறுத்தியுள்ளது.

இந்த ஆண்டில் இரண்டாவது தடவையாக மின்கட்டணத்தை திருத்தம் செய்வதற்காக இலங்கை மின்சார சபை முன்வைத்த முன்மொழிவுகள் மற்றும் மின்கட்டண திருத்தம் குறித்து பொதுமக்களின் அபிப்பிராயங்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் 22.5 சதவீதத்தால் கட்டணத்தைத் திருத்தம் செய்ய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வீட்டு பாவனைக்கான மின்கட்டணத்தை 27 சதவீதத்தாலும், மதத்தலங்களுக்கான கட்டணத்தை 30 சதவீதத்தாலும், ஹோட்டல் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கான கட்டணத்தை 25 சதவீதத்தாலும் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய மொத்த மின்கட்டணம் 22.5 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

வீட்டில் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட வியாபாரமாக தமது தொழிற்றுறையை உரிய அரச நிறுவனத்தில் பதிவு செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான நிவாரணம் மின்கட்டண குறைப்பு வழங்கப்படும் என்றும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவில் நேற்று திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ மின்கட்டண குறைப்பு தொடர்பான தீர்மானத்தை அறிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் முன்மொழிவில் முழுமையான மின் கட்டணத்தை 10 சதவீதத்தால் குறைக்கப் பரிந்துரைத்தபோதும் தரவுகளை ஆராய்ந்து மின்கட்டணத்தை 22.5 சதவீதத்தால் குறைப்பதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மதத் தலங்களில் குறைவான மின்பாவனையுடனான தொகுதிகளுக்கு இதுவரை அறவிடப்பட்ட 8 மற்றும் 9 ரூபாய் என்ற அடிப்படையிலான ஒரு அலகுக்கான கட்டணத்தை 6 ரூபாவாக குறைப்பதற்கும், 18 ரூபாவாக காணப்பட்ட ஒரு அலகுக்கான கட்டணத்தை 10 ரூபாவாகவும், 32 ரூபாவாக காணப்பட்ட ஒரு அலகுக்கான கட்டணத்தை 20 ரூபாவாகவும், 43 ரூபாவாக

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# கொட்டும் மழையிலும் பொகவந்தலாவையில் கொந்தளித்த பெருந்தோட்ட தொழிலாளர்கள்





(எஸ் சதீஸ்)

1700ரூபா சம்பளத்தை வழியுருத்தி பொகவந்தலாவ நாகரில் நேற்று (திங்கள்கிழமை) காலையிருந்து கொட்டும் மழையில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது

பொகவந்தலாவ பிரதான பேருந்து தரிப்பிபடத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டமானது பொகவந்தலாவ செல்வகந்தை சந்திவரைசென்றதுபெறுந்தோட்டநிறுவனத்தின் சம்மேளனத்தின் ஊடக பேச்சாளர் ரொஷான் ராஜதுறையின் உறுவ பொம்மைக்கு தீ வைத்து தொழிலா ளர்கள் ஆர்ப்பட்பத்தினை முன்னெடுத்தனர் ஆர்ப்பாட்டத்தின் காரணமாக சில மணி நேரம்பொகவந்தலாவ ஹட்டன்போக்குவரத்து பாதிக்கப்பட்டது



பெறுந்தோட்ட நிருவனங்களுக்கு 1700ரூபாய் சம்பளத்தை வழங்காவிட்டால்பெறுந்தோட்ட நிருவனங்களை வேறு யாருக்காவது ஒப்படைத்துவிட்டு வெளியேறுமாறு தொழிலாளர்கள் கோஷங்களை எழுப்பினர்

இதேவேளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை தொழிலாளர் காங்ரஸின் தேசிய அமைப்பாளர் பி.சக்திவேல் கறுத்து தெரிவிக்கையில் எங்களுடைய சம்பளத்தை கொடுக்க மறுத்தால் பெறுந்தோட்ட நிறுவனங்கள் பாரிய இழப்பினை சந்திக்க நேரிடும் பெறுந்தோட்ட தொழிலாளர்கள் பெறுந்தோட்ட நிறுவனங்களை போன்று சோம்பேறிகள் இல்லை பெறுந்தோட்ட தொழிலாளர்கள் தனது இரத்தத்தை வியர்வையாக சிந்தி தொழில் புரிகிறார்கள்

இதேவேளை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகனேசன் தொடர்பாக கறுத்து தெரிவிக்கையில் மனோகனேசன் மலையகத்தில் உள்ள தலைவர் அல்ல அவர் கொழும்பில் உள்ளவர் அவரின் தந்தை ஒரு நடிகர் ஜீவன் தொண்டமான் சமூகத்தலைவரின் மகன் மலையக மக்களுடைய வேதனை மனோகனேசனுக்கு தெரியாது பெறுந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் பெறுந்தோட்ட நிறுவனங்களுக்கு மனோகனேசன் ஆதரவு வழங்கினால் மலையக மக்கள் அவருக்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள் என குறிப்பிட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது 500கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டதோடு சுமார் மூன்று மணித்தியாலங்கள் முன்னெடுக்கப்பட்டதோடுபொகவந்தலாவ நகர வர்த்தகர்களும் வர்த்தக நிலையங்களை மூடி ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு வழங்கியமையும் குறிப்பிடதக்கது. (05)

# தலவாக்கலை பிரதேசத்தில் வாகன சாரதிகள் கவனம்

(பி.கேதீஸ்)

தலவாக்கலை பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக நிலவும் வீதியில் நானுஓயா பங்களாவத்தை பகுதியில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாகவாகனங்களைசெலுத்தும்





மழையுடனானகாலநிலைகாரணமாக அட்டன் நுவரெலியா பிரதான வீதியை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து நிலவும் சீரற்ற காலநிலையால் மக்கள் பல்வேறு சௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர். அட்டன் நுவரெலியா பிரதான வாகன சாரதிகள் வாகனங்களின் முன் விளக்குகளை ஒளிரவிட்டு வாகனங்களை செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பிரதான வீதிகளின் இருபுறமும் பாரிய மரங்கள், பாறைகள், மண்மேடுகள் சரிந்து விழும் அபாயம் உள்ளதால், மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள் ளனர். (05)

# திருமலையில் முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு அபிவிருத்தி தேசிய வாரம்



(ஹஸ்பர் ஏ.எச்)

முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தேசிய வாரத்தினை முன்னிட்டு வீதிப் போக்குவரத்து பாதுகாப்பு பற்றிய அடிப்படை எண்ணக்கருக்கள் பற்றி முன்பள்ளிபிள்ளைகளுக்குஅறிமுகம் செய்துவைத்தல் நிகழ்வானது இன்று (15) திருகோணமலையில் அமைந்துள்ள உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்றது.

முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக்கான தேசிய செயலகம் மற்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு 'மலரும்பிள்ளைகளுக்கு-வழிகாட்டுவோம் ' என்ற கருப்பொருளின் கீழ் ஜூலை 14 முதல் ஜூலை 20 வரை முன் பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தேசிய வாரமாக கொண்டாடப்பட்டு வருகின்றமையை தொடர்ந்து இன்று இரண்டாம் நாளாக இந்நிகழ்வு நடைபெற்று வருகின்றது.



கிழக்குமாகாணசபைமற்றும்மாகாணமுன்பள்ளி கல்விப் பணியகம் மற்றும் யுனிசெப் நிறுவனமும் இணைந்து இந்நிகழ்வினை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வினை சிறப்பிக்கும் முகமாக சிறுவர்களின் வரவேற்பு நடனம், வீதிப்போக்குவரத்து தொடர்பாக பாடல்களுடன் கூடிய நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தன.

முன்பள்ளி பிள்ளைகளிடம் சாலைப் பாதுகாப்பு குறித்த மனப்பான்மையை வளர்ப்பது, பிள்ளையின் ஆரம்ப வளர்ச்சியில் சாலை பாதுகாப்பு பற்றிய அறிவையும்விழிப்புணர்வையும்பகிர்ந்துகொள்ளல், ஆரம்பகால பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான தரமான சேவைகளைப் பெறல், இலங்கையில் ஆரம்பகால பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் மேம்பாடு பற்றி அனைத்து பொறுப்புள்ள பங்குதாரர்களிடையே பொதுவான புரிதலை உறுதி செய்தல் போன்ற விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் பாலர் பாடசாலைகள் கல்வி பணியகத்தின்தவிசாளர்,வலயக்கல்விஅலுவலகத்தின் பணிப்பாளர், துறைசார் அதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள், யுனிசெப் நிறுவனத்தின் உயரதிகாரிகள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)





காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கொக்குத்தொடுவாய் என்னாகும்?

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரையில் அந்தப் புதைகுழியில் இருந்த 52 மனித உடல்களின் எச்சங்களுக்குக் குறையாதவை எடுக்கப்பட்டுள்ளன என்று அகழ்வுப் பணிகளில் ஈடுபட்ட வல்லுநர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இனிமேல் அது தொடர்பான நீதிமன்றப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அகழ்வுப் பணிகள் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டன. இதற்கான நிதியைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளும் சிரமங்களும் இருந்தன. சிறிது சிறிதாகவே நிதி விடுவிக்கப்பட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. புதைகுழியில் இருந்து மனித எச்சங்களை வெளியே எடுப்பதற்கே இந்த நிலை என்றால், இவற்றை உரிய வகையில் அடையாளப்படுத்தி இங்கு புதைக்கப்பட்டவர்கள் யார் என்பதை உறுதிப்படுத்தும் பணிகள் எப்படி முன்னெடுக்கப்படப்போகின்றன?

இந்த அச்சம் ஏற்படுவதற்குக் காரணங்கள் இருக்கின்றன. இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் செம்மணியிலும் மன்னாரிலும் இவ்வாறு தோண்டப்பட்டு மனித உடல் எச்சங்கள் மீட்கப்பட்ட புதைகுழிகளில் இருந்த மீட்கப்பட்ட உடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் ஒரு முடிவுக்கு வராமலேயே இருக்கின்றன என்பது வரலாறு.

இதில், செம்மணி வழக்குக்கு என்ன நடந்தது என்றே தெரியாது. தமிழ் அரசியல்வாதிகளும்கூட அது குறித்து அக்கறைப்படுவதில்லை. யாழ்ப்பாணத்தில் 1998இல் காணாமலாக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கொன்று செம்மணியில் புதைக்கப்பட்டார்கள் என்று மாணவி கிருஷாந்தி கொலை வழக்குக் குற்றவாளியான இலங்கைப் படையினர் நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் செம்மணி வழக்கு தொடங்கப்பட்டது. குற்றவாளி அடையாளம் காட்டிய இடங்களில் இருந்து 15க்கும் குறையாக மனித உடல் எச்சங்கள் மீட்கப்பட்டன.

பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்கள், பன்னாட்டு நிறுவனங்கள், பன்னாட்டுப் பத்திரிகையாளர்கள் என்று பெரும் ஆரவாரத்துடன் தொடங்கப்பட்ட இந்த அகழ்வுப் பணிகளில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகளில் ஒரு எலும்புகூட யாருடையது என்று அடையாளம் காணப்படவில்லை. அந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டனைகளும் வழங்கப்படவில்லை. மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் யாருடையவை என்று அடையாளப்படுத்தப்படவேண்டிய தருணத்தில், அதாவது மரபணு சோதனை முறைகள் மூலம் எலும்புக்கூடுகளுக்குரியவர்களை அடையாளப்படுத்தப்படவேண்டிய தருணத்தில் வழக்கு காணாமலேயே போய்விட்டது.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தரப்பில் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளைத் தொடர்ந்து அனுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்ட இந்த வழக்கு பின்னர் அங்கு கிடப்பில் போடப்பட்டதாக அறியவந்தது. நிரூபிக்கப்பட்ட குற்றம் ஒன்றில் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதும் கண்டறியப்படவில்லை குற்றவாளிகளும் கண்டறியப்படவில்லை என்பதுதான் செம்மணியின் வரலாறு. அதுபோன்றே இப்போது மன்னார் புதை குழி விவகாரமும். அதிலிருந்து மீட்கப்பட்ட உடல் எச்சங்களும் யாருக்குரியவை என்பதை அடையாளம் காணும் இடத்தில் பணிகள் தடைகளை எதிர்கொள்கின்றன. நிதி அதற்கொரு பெரும் தடையாக முன்னிற்பதைக் காணமுடிகின்றது.

அத்தகைய நிலை கொக்குத்தொடுவாய்க்கும் ஏற்படாமல் இருக்கவேண்டும். ஆனால், புதைகுழி அகழ்வுக்கே நிதியைப் பெறுவதில் சிரமங்கள் இருக்கும்போது பெரும் செலவு பிடிக்கக்கூடிய அடுத்தடுத்த கட்டங்களை இந்த வழக்கில் கடப்பதற்கான நிதி ஆளும்தரப்பு வழங்குமா என்கிற கேள்வி முன்னிற்பதைத் தவிர்க்க முடியவில்லை. கடந்த கால வரலாறுகள் அந்தக் கேள்வியை எழுப்புகின்றன. பன்னாட்டுச் சமூகத்தையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை போன்ற அமைப்புக்களையும் சமாளிப்பதற்கு புதைகுழிகளைத் தோண்டுவதுடன் ஆளும் தரப்புத் தனது பணிகளை நிறுத்திக்கொள்கிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆளும் தரப்பு நிதி ஆதரவு வழங்காமல், தேவையான ஒத்தாசைகளைப் புரியாமல் ஒரு கட்டத்திற்கு மேல் நீதிமன்றத்தால் இதுபோன்ற வழக்குகளை முன்கொண்டு செல்ல முடியாத நிலையே ஏற்பட்டு அவை கிடப்பில் போடப்படுவது தவிர்க்க முடியாததாகும். கொக்குத்தொடுவாய் விடயத்திலும் அதுவே நடந்துமுடியாமல் இருப்பதை உறுதிப்படுத்தவேண்டிய அவசியம் இருக்கின்றது. அங்கு புதைக்கப்பட்டவர்கள் யார் என்பது அடையாளப்படுத்தப்பட்டு அவர்கள் எப்படி எங்கு புதைக்கப்பட்டார்கள் என்பதும் கண்டறியப்படவேண்டியது அவசியம். அதற்கான நிதி ஆதாரங்களை எப்படி மேற்கொள்வது என்பதில் அரசை மட்டும் நம்பியிருந்தால் பயன் இருக்காது என்பதே படிப்பினை.



# அமெரிக்க அதிபர்கள் ஏன் இலக்கு வைக்கப்படுகிறார்கள்?

அமெரிக்காவில் இதுவரை அதிபர்கள் மற்றும் அதிபர் வேட்பாளர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகள் ஏராளம். உலகின் பலம்மிக்க நாடு, உலகப் பொலிஸ்காரன், மிகப் பெரிய ஜனநாயக நாடு என்றெல்லாம் போற்றப்படும் அமெரிக்காவில்தான் அதிக எண்ணிக்கையில் அதிபர்கள் படுகொலைகளும் படுகொலை முயற்சிகளும் நடந்துள்ளன.

அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்ப் மீது ஜூலை 13 நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் அவர் காதில் குண்டுபட்டுக் காயமடைந்துள்ளார். துப்பாக்கியால் சுட்டதாகக் கூறப்படும் நபரை அமெரிக்க சிறப்புப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

நவம்பரில் நடைபெறும் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடவுள்ள டிரம்ப், பென்சில்வேனியாவில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தார். இந்த நிலையில் மர்ம நபர் ஒருவரால் இந்தத் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா ஒரு தேசமாக உருவானதிலிருந்து இதுவரை அமெரிக்க அதிபர்கள் மற்றும் அதிபர் வேட்பாளர்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறை சம்பவங்கள் குறித்த ஒரு அலசல்:

### படுகொலை செய்யப்பட்ட அதிபர்கள்:

ஆபிரகாம் லிங்கன் (16-வது அதிபர்)

ஆபிரகாம் லிங்கன், அமெரிக்க அதிபர்கள் வரலாற்றில் படுகொலை செய்யப்பட்ட முதல் அதிபராவார். ஏப்ரல் 14, 1865 அன்று லிங்கன் தனது மனைவி மேரி டோட் லிங்கனுடன் வாஷிங்டனிலுள்ள ஃபோர்ட் திரையரங்கில் சிறப்பு நகைச்சுவை நாடகம் ஒன்றினைக் காணச் சென்றபோது ஜான் வில்கிஸ் பூத் எனும் மேடை நாடக நடிகரால் தலையில் சுடப்பட்டு இறந்தார்.

சுடப்பட்டதும் அரங்கின் அருகேயுள்ள வீட்டில் மருத்துவ உதவிகளுக்காக அழைத்துச் செல்லப்பட்ட லிங்கன் மறுநாள் காலை உயிரிழந்தார்.

கொல்லப்படுவதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு அடிமைத்தனத்திற்கு எதிரான உள்நாட்டுப் போரில் அடிமைகளுக்கு சுதந்திரம் வழங்கி விடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டார் லிங்கன். அவர் கருப்பின மக்களின் உரிமைகளுக்கு ஆதாரவாக இருந்தது கொலைக்கான காரணமாகக் குறிப்பிடப்பட்டது.

லிங்கனைக் கொலை செய்த பூத் ஏப்ரல் 26, 1865 அன்று விர்ஜீனியாவில் தலைமறைவாக இருந்தபோது பிடிபட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

லிங்கனுக்குப் பிறகு துணை அதிபர் ஆண்ட்ரூ ஜான்சன் அதிபராகப் பதவியேற்றார்.

### ஜேம்ஸ் கார்ஃபீல்டு (20-வது அதிபர்)

ஜேம்ஸ் கார்ஃபீல்டு அதிபராகப் பதவியேற்ற ஆறு மாதங்களில் படுகொலை செய்யப்பட்டார்.

ஜூலை 2, 1881 அன்று வாஷிங்டனிலிருந்து நியூ இங்கிலாந்து செல்லும் தொடர்வண்டியைப் பிடிக்கச் செல்கையில் சார்லஸ் கைட்டோ என்பவரால் துப்பாக்கியால் சுடப்பட்டார்.

தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகாம்பெல் அமெரிக்க அதிபருக்கென தனியாகத் தயாரிக்கப்பட்ட சாதனத்தைக் கொண்டு அவரது மார்பில் துளைத்த குண்டினை அகற்ற முயன்று தோற்றார்.

படுகாயமடைந்து வெள்ளை மாளிகையில் பல வாரங்கள் படுக்கையில் கிடந்த அதிபர் கார்ஃபீல்டு, செப்டம்பரில் நியூ ஜெர்சி கடற்கரைக்கு அழைத்துச் சென்றபோது உயிரிழந்தார்.

கார்ஃபீல்டுக்குப் பிறகு துணை அதிபர் செஸ்தர் ஆர்தர் அதிபராகப் பதவியேற்றார்.

குற்றவாளி சார்லஸ் கைட்டோ குற்றம் நிரூபிக்கப்பட்டு ஜூன் மாதம் 1882 தூக்கிலிடப்பட்டார்.

### வில்லியம் மெக்கின்லி (25-வது அதிபர்)

வில்லியம் மெக்கின்லி செப்டம்பர் 6, 1901 அன்று நியூயார்க்கில் உரையாற்றிய பிறகு மக்களுடன் கைகுலுக்கிக் கொண்டிருந்தபோது கூட்டத்தில் இருந்த நபரால் இருமுறை மார்பில் துப்பாக்கியால் சுடப்பட்டார்.

மருத்துவர்கள் மெக்கின்லியைக் காப்பாற்றப் போராடியபோதும் குருதி ஓட்டம் குறைந்ததால் செப்டம்பர் 6, 1901 அன்று உயிரிழந்தார். இரண்டாவது முறை அதிபராகப் பதவியேற்று 6 மாதங்கள் ஆகியிருந்த நிலையில் மெக்கின்லி இறந்து போனார்.

அவருக்குப் பின் துணை அதிபர் தியோடர் ரூஸ்வெல்ட் அதிபராகப் பதவியேற்றார்.

குற்றவாளி லியோன்.எஃப்.சோல்கோஸ் குற்றத்தை ஒப்புக்கொண்ட பின் ஒக்டோபர் 29, 1901 அன்று மின்சார நாற்காலியில் அமரவைத்துக் கொல்லப்பட்டார்.

### ஜான் எஃப். கென்னடி (35-வது அதிபர்)

அமெரிக்க அதிபர் கென்னடி தனது மனைவி ஜாக்குலின் கென்னடியுடன் 22 நவம்பர் 1963 அன்று டல்லாஸ் பகுதியில் நடந்த வாகன அணிவகுப்பில் கலந்துகொண்டபோது அங்கு மறைந்திருந்த மர்மநபர் உயர்ரக துப்பாக்கியால் சுட்டதில் உயிரிழந்தார்.

துப்பாக்கிச்சூடு நடைபெற்ற சிறிது நேரத்தில் லீ ஹார்வே ஆஸ்வால்ட் என்ற குற்றவாளியை அருகிலிருந்த கட்டடத்தில் வைத்து போலீஸார் கைது செய்தனர்.

இரு நாள்களுக்குப் பிறகு, குற்றவாளியை ஜெயிலில் அடைக்கக் கூட்டிச் சென்றபோது டல்லாஸ் பகுதியின் இரவுவிடுதி உரிமையாளர் ஜாக் ரூபி குற்றவாளியை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

துணை அதிபர் லிண்டன் பி.ஜான்சன் என்பவர் கென்னடிக்கு பின் அதிபராகப் பதவியேற்றார். விமானத்தில் பதவிப் பிரமாணம் செய்த ஒரே அதிபர் இவரே.

### ராபர்ட் எஃப். கென்னடி (அதிபர் வேட்பாளர்)

கென்னடி அமெரிக்காவின் நியூயார்க் மேலவை உறுப்பினராக பணியாற்றியவர். இவர், சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் அதிபர் ஜான்.எஃப்.கென்னடியின் சகோதரராவார்.

அமெரிக்கக் ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளராக இருந்த கென்னடி 1968-ம் ஆண்டு லாஸ் ஏஞ்சலிஸில் உள்ள ஹோட்டலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஐந்து நபர்கள் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தனர்.

1967இ-ல் நடந்த போரில் இஸ்ரேலுக்கு ஆதரவாக கென்னடி குரல் கொடுத்ததற்காக 24 வயதான சிர்ஹான் என்கிற பாலஸ்தீனரால் சுட்டுக் கொல்லப்பட்டார். சிர்ஹானுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. கடந்தாண்டு, விடுதலை செய்வதற்கான மனு நிராகரிக்கப்பட்டு சிர்ஹான் சிறையில் உள்ளார்.

### படுகொலை முயற்சியில் தப்பித்த அதிபர்கள்:

**ஃபிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் (32-வது**

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# அமெரிக்க அதிபர்கள் ஏன் இலக்கு வைக்கப்படுகிறார்கள்?

4ம் பக்க தொடர்ச்சி...........

**அதிபர்)**

அமெரிக்காவில் இருமுறைக்கு மேல் அதிபராக இருந்த இவர், நீண்ட காலம் பதவி வகித்த ஒரே அதிபராவார்.

மியாமி நகரில் 1944-இல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வில் பேசுகையில் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. ஆனால் யாருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

அதற்கு முன்னர் 1933-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் சிகாகோ மேயர் ஆண்டன் செர்மாக் கொல்லப்பட, ரூஸ்வெல்ட் காயங்களின்றி தப்பித்தார்.

இதில், குற்றவாளி குசிப்பே ஸங்காரா தூக்கிலிடப்பட்டார்.

**ஹாரி எஸ். ட்ரூமேன் (33-வது அதிபர்)**

1950ஆ-ம் ஆண்டு நவம்பரில் ட்ரூமேன் வெள்ளை மாளிகையின் எதிரே உள்ள பிளேர் ஹவுசில் தங்கியிருந்த போது இரண்டு நபர்கள் துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்தனர்.

அவர்களுக்கும் வெள்ளை மாளிகை போலீஸாருக்கும் நடைபெற்றத் துப்பாக்கிச் சூட்டில் போலீஸ்காரர் ஒருவரும், தாக்குதலில் ஈடுபட்ட நபர்களில் ஒருவரும் கொல்லப்பட்டனர். மேலும், இரு போலீஸார் படுகாயமடைந்தனர். அதிபர் ட்ரூமேன் காயங்களின்றி உயிர்தப்பினார்.

ஆஸ்கர் காலஸோ என்கிற மற்றொரு குற்றவாளி கைது செய்யப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. 1952-இல் ட்ரூமேன் அந்தத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். பின்னர், 1979இ-ல் ஜிம்மி கார்டர் அதிபரானபோது குற்றவாளியை விடுதலை செய்தார்.

**ஜெரால்ட் ஃபோர்ட் (38-வது அதிபர்)**

ஜெரால்ட் ஃபோர்ட் மீது 1975-ம் ஆண்டில் ஒரே மாதத்திற்குள் இருமுறை கொலைமுயற்சி நடந்து, இரு முறையும் காயங்களின்றி தப்பித்தார்.

முதல் முயற்சியில், கலிஃபோர்னியா ஆளுநரைச் சந்திக்கச் சென்றபோது சார்லஸ் மேன்சனின் விசுவாசி ஒருவர் கூட்டத்திலிருந்து துப்பாக்கியால் ஃபோர்டைச் சுடுவதற்கு முற்பட துப்பாக்கி வேலை செய்யாததால் பாதிப்பு ஏற்படவில்லை.

சுட முயன்ற ஃப்ரோம்மி என்ற நபர் சிறைவாசத்திற்குப் பின் விடுவிக்கப்பட்டார்.

அந்தச் சம்பவம் நடந்து 17 நாள்களுக்குப் பின், சாரா ஜேன் மூர் என்றா பெண் சான் ஃபிரான்சிஸ்கோவில் உள்ள ஹோட்டலின் வாசலில் அதிபர் ஃபோர்டை மறித்துத் துப்பாக்கியால் சுட முயன்றபோது தப்பித்துவிட்டார். பாதுகாவலர்கள் அந்தப் பெண்னை சுற்றிப் பிடிக்கையில் இரண்டாவது குண்டு சுடப்பட்டு அதுவும் அதிபரின் மேல் தாக்கவில்லை.

துப்பாக்கியால் சுட்ட பெண்மணி சிறையில் அடைக்கப்பட்டு 2007ஆ-ம் ஆண்டு விடுவிக்கப்பட்டார்.

**ரொனால்ட் ரீகன் (40-வது அதிபர்)**

ரொனால்ட் ரீகன் மார்ச் 30, 1981 அன்று வாஷிங்டனில் மக்கள் கூட்டத்தில் பேசிமுடித்து தனது வாகனம் நோக்கி நடந்து செல்கையில் கூட்டத்திலிருந்த ஜான் ஹின்க்ளி என்ற நபரால் சுடப்பட்டார். அவருடன் சேர்த்து அவரது செயலாளர் ஜேம்ஸ் பிராடி உள்பட மூன்று பேர் சுடப்பட்டனர். அந்தத் தாக்குதலில் இருந்து ரீகன் மீண்டுவந்தார்.

துப்பாக்கியால் சுட்ட நபரான ஹின்க்ளி கைது செய்யப்பட்டார். மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதால் மனநல மருத்துவமனையில் அடைக்குமாறு உத்தரவிடப்பட்டது. பின்னர், 2022ஆ-ம் ஆண்டு அவருக்கு மற்றவர்களால் ஆபத்து நேராது என்று முடிவு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

**ஜார்ஜ் புஷ் (43-வது அதிபர்)**

ஜார்ஜ் புஷ் 2005ஆ-ம் ஆண்டு ஜார்ஜியாவில் அந்த நாட்டு அதிபர் மிகைல் சாகஷ்விலியுடன் பேரணியில் கலந்துகொண்டபோது அவரை நோக்கி கையெறி குண்டு வீசப்பட்டது.

அதிபர்கள் இருவரும் குண்டு துளைக்காதத் தடுப்புக்குப் பின் இருந்தனர். அந்த குண்டு 100 அடி தூரத்தில் வீசப்பட்டு வெடிக்காமல் போனதால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

குற்றவாளி விளாதிமர் அருத்யுனியன் என்பவர் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

**தியோடர் ரூஸ்வெல்ட் (அதிபர் வேட்பாளர்)**

முன்னாள் அமெரிக்க அதிபரான ரூஸ்வெல்ட் 1912ஆ-ம் ஆண்டு பிரசாரம் முடிந்து வெள்ளை மாளிகைக்குத் திரும்பும்போது மார்பில் சுடப்பட்டார்.

ரூஸ்வெல்ட்டின்ன் பாக்கெட்டில் இருந்த மடிக்கப்பட்ட காகிதங்களும், கண்ணாடிப் பெட்டியும் இருந்ததால் அவருக்கு கடுமையாகக் காயங்கள் ஏற்படவில்லை.

இந்தச் சம்பவத்தில் ஜான் ஷ்ராங் என்பவர் கைது செய்யப்பட்டு மனநலக் காப்பகத்தில் தன் வாழ்நாளைக் கழித்தார்.

**ஜார்ஜ் சி. வாலஸ் (அதிபர் வேட்பாளர்)**

வாலஸ் குடியரசு கட்சியின் வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்ட பின் நடந்த பிரசாரத்தில் கடந்த 1972ஆ-ம் ஆண்டு மர்மநபரால் துப்பாக்கியால் சுடப்பட்டார். இந்தத் தாக்குதலால் அவரது இடுப்புக்கிக் கீழுள்ள பகுதி செயலிழந்தது.

அலபாமா பகுதி ஆளுநரான ஜார்ஜ் வாலஸ் பிரிவினைவாதக் கருத்துகளுக்குப் பெயர்பெற்றவர். பிற்காலத்தில், அதனை மாற்றிக் கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் ஆர்தர் பிரேமர் என்ற குற்றவாளி கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர், 2007-இல் அவர் விடுவிக்கப்பட்டார்.

முடிவேயில்லாது தொடரும் இந்தப் போக்குக்குக் காரணம் என்ன என்பது இதுவரையில் தெரியவில்லை என்றாலும் அமெரிக்காவில் நிலவும் ஆயுதங்களின் தாராளமான புழக்கம் இதற்கொரு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# மோசடி சந்தேகநபர்கள் பிணையில் விடுவிப்பு

கனடாவில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக கூறி பண மோசடி செய்ததாக கூறப்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனமொன்றின் உரிமையாளர் உட்பட இருவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரள்ளை பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்று கனடாவில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாக கூறி 10 இலட்சம் ரூபா பணத்தை பெற்று மோசடி செய்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவினருக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் உரிமையாளர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 10 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.(05)

# இரு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

## 10 பேர் காயம்



தலங்கம - கொஸ்வத்த பகுதியில் இரண்டு தனியார் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளானதில் பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் கடுவலையிலிருந்து கொள்ளுப்பிட்டி நோக்கி பயணித்த பஸ்ஸின் சாரதியும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீகொடவில் இருந்து புறக்கோட்டை நோக்கி பயணித்த பஸ் ஒன்றும் கடுவலையிலிருந்து கொள்ளுப்பிட்டி நோக்கி பயணித்த பஸ் ஒன்றுமே மோதி விபத்துக்குள்ளாகியதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# மொரட்டுவையில் வீடொன்றில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

மொரட்டுவை, லக்ஷபதிய ரத்துகுருஸ்ஸ வத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக மொரட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

'பொடி அய்யா' என அழைக்கப்படும் ஹரேந்து குமார என்ற 41 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் பிரதேவாசிகளுக்கு இந்த வீட்டில் நபரொருவர் கூச்சலிடும் சத்தம் கேட்டுள்ளது.

பின்னர், சிறுது நேரம் கழித்து கொலை செய்யப்பட்டவரது மனைவி தனது கை,கால்களில் கட்டப்பட்டுள்ள கயிறுகளை கழற்றிவிட்டு அயல் வீட்டில் வசிக்கும் பெண் ஒருவருக்கு தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த தொலைபேசி அழைப்பை பெற்றுக்கொண்ட அயல் வீட்டில் வசிக்கும் பெண் சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, கொலை செய்யப்பட்டவரது மனைவி பிரதேசவாசிகளின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பிறந்தநாள் விழாவில் ஏற்பட்ட மோதலில் நால்வர் காயம்



தனமல்வில குமாரகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற பிறந்தநாள் விழாவின் போது ஏற்பட்ட மோதலில் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிறந்தநாள் விழா இடம்பெற்றுக்கொண்டிருந்த வீட்டின் வாயிலை கெப் வண்டியினால் ஒருவர் மோதி சேதப்படுத்திசென்றதால் இந்த மோதல் ஏற்பட்டுள்ளதாக தனமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதலின் காயமடைந்த நான்கு பேர் அம்பாந்தோட்டை மற்றும் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கெப் வண்டியில் மோதி வாயிலை சேதப்படுத்திய சாரதி கொலை மற்றும் போதைப்பொருள் கடத்தல் குற்றங்களுக்காக நீதிமன்றில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் உள்ளவர்களுடன் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக கெப் வண்டியின் சாரதி இந்த செயலை செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)








## மின்கட்ட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்ட ஒரு அலகுக்கான கட்டணத்தை 30 ரூபாவாகவும் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மத தலங்களுக்காக அறவிடப்பட்ட மாத நிலையான கட்டணத்துக்கான அனைத்து தொகுதிகளுக்கான கட்டணங்களும் குறைக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்கள் மற்றும் பொதுபணிகளுக்கு ஒரு அலகுக்காக இதுவரை அறவிடப்பட்ட 55 ரூபா, 45 ரூபா, 37 ரூபா முறையே 46.75 ரூபா, 38.25 ரூபா, 31.45 ரூபா என்ற அடிப்படையில் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டண திருத்தத்துடன் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு ஏழு நிபந்தனைகளையும் விதித்துள்ளது. மின்பாவனையாளர்கள் கோரினால் அவர்களுக்கு மின் கட்டணப் பற்றுச்சீட்டினை விநியோகிக்கவேண்டும் என்பது அதில் முக்கியமானது.

அதேபோல் மின்னுற்பத்திக்காக எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தம் செய்யுமாறும், 2023ஆம் ஆண்டு இறுதி காலாண்டின் செலவுகள் குறித்து விரிவான சுயாதீன கணக்காய்வினை மேற்கொண்டு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30க்குள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மின்சார சபைக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது என்பதற்காக மின்சாரத்தை வீண்விரயம் செய்வதை மின்பாவனையாளர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். மதத்தலங்களில் மின்சாரத்தை எவ்வித சிக்கனமும் இல்லாமல் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. ஆகவே மின்னுற்பத்தியைவரையறைக்குள் வைத்துக்கொள்ள வேண்டுமாயின் பாவனையாளர்கள் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் எனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

## தேர்தலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழாம் முன்னிலையில் இந்த மனு நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுனவினால் இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் உரிய வகையில் நிறைவேற்றப்படாததால், பொதுமக்கள் கருத்துக்கணிப்பின் ஊடாக அது நிறைவேற்றப்படும்வரை, ஜனாதிபதி தேர்தலை நடத்துவது அரசமைப்பிற்கு முரணானது என தீர்ப்பு வழங்குமாறு மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன் 19ஆவது திருத்தத்தை மக்கள் கருத்துக்கணிப்பிற்கு உட்படுத்துமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு உத்தரவிடுமாறும் மனுதாரர் தமது மனுவில் கோரியுள்ளார். மனுவின் பிரதிவாதிகளாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவும் அதன் உறுப்பினர்களும் நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் சட்டமா அதிபரும் பெயரிடப்பட்டிருந்தனர்.

## நாடாளுமன்றின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற நிலைப்பாட்டில் தான் எப்போதும் இருக்கிறார் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்

மஹியங்கனை பொது விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற உறுமய நிரந்தர காணி உறுதி வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணி உறுதிகளை வழங்கும் வேலைத்திட்டம் இந்த நாட்டில் 2002 ஆம், 2003 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். ஆனால் நீதிமன்றம் அதைத் தடுத்து நிறுத்தியது. இந்த நாட்டின் காணிக்கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் நான் செயற்பட்டேன். காணி அபிவிருத்திக்கட்டளைச்சட்டம் எனது தாத்தா எஸ்.ஏ.விக்கிரமசிங்கவினால் தயாரிக்கப்பட்டது.

டி.எஸ். சேனாநாயக்க விவசாய அமைச்சராக அநுராதபுரத்தில் உள்ள பழைய குளங்களை மேற்பார்வை செய்வதற்காக வந்தார். சில குளங்கள் புனரமைக்கப்பட்டன. பராக்கிரம சமுத்திரம் உட்பட மற்றவை புனரமைக்கப்படவிருந்தன. அதன் பின்னரே, அந்த பகுதியில் மக்களைக் குடியமர்த்துவதில் கவனம் செலுத்தப்பட்டது.

காணி அபிவிருத்தி திணைக்களம் என்ற பெயரில் புதிய நிறுவனமொன்றை நிறுவவுள்ளதாக எனது தாத்தா சீ.எல். விக்ரமசிங்கவுக்கு, டி.எஸ். சேனநாயக்க அறிவித்தார். அதனைப் பொறுப்பேற்க வருமாறு கோரினார். அதற்குத் தேவையான சட்டங்களைத் தயாரிக்கவும் அவர் கேட்டுக்கொண்டார். அதன்படி சட்டங்களைத்தயாரித்துநிறைவேற்றி முதல் காணி அபிவிருத்தி ஆணையாளராகப் பதவியேற்று மக்களை இந்தப் பகுதிக்கு அழைத்து வந்து குடியமர்த்தினார். ஈர வலயத்தின் நிலமற்ற மக்களைக் குடியமர்த்தி, இந்தப் பகுதிகளில் கிராமங்களை நிறுவி, அந்தக் கிராமங்களையும் மேம்படுத்துவதே இதன் நோக்கமாக இருந்தது. அந்த வேலைத்திட்டத்திற்காகவே இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டது.

அவருடைய ஆவணங்களைப் படித்தபோது, ஒரு சிக்கல் எழுந்தது. அந்த சமயம் இலங்கையில் பலருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எனவே, பல்வேறு நபர்கள் வந்து அந்த நபர்களை பல்வேறு ஒப்பந்தங்களில் இணைத்து அவர்களுக்குக் கடன் கொடுத்து நிலத்தை அபகரிக்க முயன்றனர். அதன் காரணமாகவே நில உரிமை முறை உருவாக்கப்பட்டது.

1935இற்கும் இன்றைக்கும் இடையில் பெரும் வித்தியாசம் இருக்கிறது. இன்று, இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் நன்கு படித்த பட்டதாரிகள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்கள் இருக்கின்றனர். எனவே, இன்று மக்கள் ஏமாற்றப்படும் நிலை இல்லை.

நாங்கள் மகாவலி திட்டத்தை ஆரம்பிக்கும் போது இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். ஆனால் 10-15 ஆண்டுகளுக்குப் பிறகு அது தேவைப்படவில்லை. அந்த மக்கள் நிலங்களைப் பாதுகாத்தனர். அந்த மக்கள் நிலத்தை விற்க மாட்டார்கள் என்று நம்பினேன். ஆனால், அப்போது மக்கள் இந்த நில உரிமையை எதிர்பார்த்தனர்.

இதன்படி காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்தக் காணிகளை வழங்குவதற்கு புதிய சட்டம் தேவைப்பட்டது. அந்த சட்ட வரைவை நான் முன்வைத்தேன். ஆனால், அத்தகைய சட்டத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது.

அந்தச்சமயத்தில் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பு கிடைத்திருந்தால் 20 வருடங்களுக்கு முன்னரே மக்களின் இலவச காணி உரிமையை உறுதிப்படுத்தும் வாய்ப்பு கிடைத்திருக்கும். ஆனால் அதன் பிறகு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிரந்தரமாகக் காணிகள் வழங்கப்பட்டன. காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணியை ஷங்கிரிலா ஹோட்டலுக்கு வழங்க முடியுமானால் ஜனாதிபதி என்ற முறையில் 20 இலட்சம் மக்களுக்கு காணி உரிமையை ஏன் வழங்க முடியாது என நான் கேட்க விரும்புகின்றேன்.

இதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்றார்கள். ஆனால் அதிகார வரம்பு நீதிமன்றத்திற்கு அன்றி நாடாளுமன்றத்திற்கே உள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நாடாளுமன்றத்தின் நிறைவேற்று அதிகாரத்தில் நீதித்துறை தலையிடக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நான் எப்போதும் இருக்கிறேன்.

20 ஆண்டுகளுக்கு முன் செயல்படுத்தப்படக்கூடிய திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது. இப்போது இந்த நில உரிமைகளை மக்களுக்கு வழங்கி வருகிறோம். நான் முதன்முதலில் இந்தப் பிரதேசத்திற்கு 60 ஆண்டுகளுக்கு முன்பு வந்தேன். அப்போது இந்த பிரதேசம் அடர்ந்த காடாக இருந்தது. மீண்டும் 1978 ஆம் ஆண்டு அமைச்சர் காமினி திஸாநாயக்க உள்ளிட்ட குழுவுடன் இங்கு வந்து உளுஹிட்டிய திட்டத்தை ஆரம்பித்து வைத்தோம். உளுஹிடியில் இருந்து வந்த அனைவருக்கும் நிரந்தர காணி உறுதி வழங்கும் திட்டத்தை ஆரம்பிக்க இன்று இங்கு வந்துள்ளேன்.

இது உங்கள் உரிமை. இது ஆளும்தரப்புக்குச் சொந்தமானது அல்ல. கொத்மலை நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக பொதுமக்களின் காணிகள் ஆளும்தரப்பால் சுவீகரிக்கப்பட்டன. அத்துடன் தெல்தெனிய நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக காணி பெறப்பட்டன. அந்த மக்கள் இந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். இவை உங்களுக்குச் சொந்தமான நிலங்கள். அந்த உரிமையை உறுதி செய்யும் வகையில் இன்று இந்த நிரந்தர காணிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதை உங்கள் முன்னேற்றத்தின் தொடக்கமாக மாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான சூழலை ஆளும்தரப்பு ஏற்படுத்திக்கொடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## பளவெளி ஆதி சிவன் ஆலய எண்ணெய்க் காப்பு நிகழ்வு

அம்பாறை, வளத்தாப்பிட்டி கிராமத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் ஆதிசக்தி உடனுறை ஆதி சிவன்ஆலயகுடமுழுக்குவிழாவின் ஓரங்கமான எண்ணெய்க்காப்பு சாத்தும்வைபவம்ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோது. (05)







## லொறி - வான் மோதி தம்புள்ளையில் விபத்து

### ஒருவர் உயிரிழப்பு

மாத்தளை, தம்புள்ளை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமைஇடம்பெற்றுள்ளது.

லொறி ஒன்று சாரதி உறங்கியதால்எதிர்த்திசையில் பயணித்த சிறிய வேன் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது வேனில் பயணித்த பலர் படுகாயமடைந்துள்ள நிலையில்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குருணாகல் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக ஒலுவில் நோக்கிப் பயணித்த வான் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள் ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கத்தின் பணிப்புறக்கணிப்பு 75 நாள்களாக தொடர்கிறது

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக் கணிப்பு போராட்டத்தை நேற்று (திங்கட்கிழமை) முதல் இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கத்தினர் கடந்த 75 நாள்களாக இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பல்கலைக்கழகமானியங்கள்ஆணைக்குழுவின் தலைவர்மற்றும்அமைச்சர்ஆகியோருக்குஇடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (05)

# யாழ்ப்பாணத்து தமிழையும் சைவத்தையும் தமிழ்நாட்டில்கூடக் காணக் கிடைக்காது

## சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சிவஞானம் தெரிவிப்பு



தமிழ்நாட்டில் இவ்வாறான தமிழ் இல்லையே என்றுயோசிக்கவைக்கும்அளவுக்குயாழ்ப்பாணத்தில் தமிழும்சைவமும்தழைத்திருக்கிறது என சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் சிவஞானம் தெரிவித்தார்.

தெல்லிப்பழை பிரதான வீதி வட்டுக்கோட்டையில் தி.பாலசுப்பிரமணியம் நினைவாக அவரது குடும்ப உறுப்பினர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இல்லம் புனரமைக்கப்பட்டு சிவபூமி தேவார மடமாக திறந்துவைக்கப்பட்டது.

இதில்பிரதமவிருந்தினராகவருகைதந்தசென்னை உயர்நீதிமன்றநீதியரசர்சிவஞானம், சிவபூமிதேவார மடத்தை திறந்துவைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் –

இந்தியாவில் தமிழ்நாடு என்று பெயர் இருந்தும், அங்கே தமிழ் இவ்வாறு இருக்காதா என்று யோசிக்கவைக்கிறது. அந்தளவுக்கு யாழ்ப்பாணத்தில் தமிழும் சைவமும் தழைத்திருக்கிறது.

சைவத்துக்கும் தமிழுக்கும் சேவை செய்ய கலாநிதி ஆறு.திருமுருகன் தமிழ்நாட்டுக்கு வருகை தரவேண்டும்.

சாதாரண தொண்டு செய்பவர்கள் விளம்பரங்களுடன் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். விளப்பரத்துக்காகவே தொண்டு செய்கிறார்கள். ஆனால் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தன்னலம் இல்லாது எவ்வளவோ திருப்பணிகளை செய்துவருகிறார். இத்தகையபணிகளைமன்னர்கள்செய்யவேண்டிய பணி இவர் சாதாரணமாக செய்துவருகிறார். இது இறைவனின் அருள் இல்லாமல் செய்யமுடியாது. இறைவனின் அருள் இவருக்கு உள்ளது.

சைவமும்தமிழும்எல்லோரையும்வாழவைக்கும். அத்தகைய பணி செய்பவரை யாழ்ப்பாணம் பெற்றுள்ளது. இத்தகைய பணி தமிழகத்தில் இல்லையே. காலமாற்றத்தால் சுருங்கிப்போயுள்ளது. ஆறுதிருமுருகனின்பணிஉலகில்பலஇடங்களுக்கும் தேவையாக உள்ளது.

இன்றைய தேவார மடம் திறப்பு விழா அவசியமான ஒன்றாகும். எனது பதவி நிலை காரணமாக பல இடங்களுக்கு அழைப்பார்கள். அங்கு சென்றால் பல மொழிகளை பேசுவார்கள். தேவாரங்கள் பாடுவார்கள். அவை சிலவே. ஆனால் இங்கு திருமுறை ஆடல் ஆற்றுகை சிறப்பாக நடைபெற்றுள்ளது. இந்த மடத்தில் தேவாரத்துடன் ஆடல் ஆற்றுகையும் நடைபெறவேண்டும். இந்த தேவார மடத்தை இந்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். - என்றார். (05)

# கதிர்காம மருத்துவ முகாமில் 4000 யாத்திரிகர்களுக்கு சிகிச்சை

(எஸ்.அஷ்ரப்கான்)

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து நடாத்திய இலவச மருத்துவ முகாமில் நான்காயிரத்துக்கும் மேற்பட்டேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் தொனிப்பொருளில் உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் கடந்த திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை 11 நாள்கள் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இம்மருத்துவ முகாமில் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளதுடன் தங்களுக்குத் தேவையான ஆயுர்வேத மருந்துகளையும் பெற்றுச் சென்றனர்.

இதில் உடல் உபாதைகளை நீக்கக்கூடிய மருந்துகள் மற்றும் உடல் வலிகளைப் போக்கும் ஆயுர்வேத மருந்துகளும், பாம் போன்ற பல மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் அக்கரைப்பற்றைச் சேர்ந்த தொழிலதிபர் ஏ.எம்.அப்துல் சலாமின் உதவியுடன் சுமார் 6000 பாதயாத்திரிகர்களின் தாக சாந்திக்கான குளிர்பானமும் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் ஆயுர்வேத வைத்தியர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டு சிறந்த சேவையை வழங்கியதுடன் கல்முனை மற்றும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் கலந்துகொண்டதாக பிரதி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

கிழக்குமாகாணஆளுநர்செந்தில்தொண்டமானின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர், சுதேச மருத்துவதிணைக்களத்தின்மாகாணஆணையாளர் ஆகியோரின்ஆலோசனைமற்றும்வழிகாட்டலின்கீழ் இம்மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உகந்தை காட்டுவழிப் பாதையூடாக இம்முறை 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதயாத்திரை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (05)

# இங்கிரியவில் கெப் வாகனம் மோதி பாதசாரி உயிரிழப்பு

களுத்துறையில்இங்கிரியபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இங்கிரிய - பாதுக்க வீதியில் இங்கிரிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்துள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இங்கிரியவில் இருந்து பாதுக்க நோக்கிப் பயணித்த கெப் வாகனம் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது படுகாயமடைந்த பாதசாரி ஹொரணை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கிரிய பகுதியில் வசிக்கும் 48 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் ஹொரணை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைஇங்கிரியபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பட்டம்பிட்டியில் விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு.



(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய பிரிவுக்குட்பட்ட 14 விவசாய அமைப்புக்களின் சம்மேளனமான பட்டம்பிட்டி திட்ட முகாமைத்துவ குழு ஏற்பாடு செய்த சம்மாந்துறை பிரதேச புதிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கான வரவேற்பும், கௌரவிப்பும்நிகழ்வுஞாயிற்றுக்கிழமை நெய்னாகாடு பிரதேசத்தில் பட்டம்பிட்டி திட்ட முகாமைத்துவ குழுவின் தலைவரும், திருகோணமலைமாவட்ட பிரதம உள்ளகக்கணக்காய்வாளருமான ஏ.எல். மஹ்ரூப் தலைமையில் இடம்பெற்றது.





சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளராக பொறுப்பேற்றிருக்கும் எந்திரி ஆர்.வேல்கஜன் அவர்களையும் காரியாலய அதிகாரிகளையும் வரவேற்று கௌரவித்த இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதிப்பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம். மன்சூர் மற்றும் கிழக்குமாகாணபிரதிப்பிரதமசெயலாளர் (நிதி) ஏ.எம்.எம். றபீக்ஆகியோர்கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய பிரிவுக்குட்பட்ட 14 விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்கும்பிரச்சினைகளை கலந்துரையாடிய விவசாயிகள் அவற்றுக்கானதீர்வைபெற்றுத் தரவேண்டியவிடயங்களையும் எடுத்துரைத்தனர்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலய உத்தியோகத்தத்தார்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(05

காலைக்கதிர் Kalaikkathir

# வளத்தாப்பிட்டி இஸ்மாயில்புரம் பிரதான வீதியை அபிவிருத்தி செய்து தருமாறு கோரிப் போராட்டம்.





(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் பிரதான வீதியை அபிவிருத்தி செய்து தருமாறு கோரி நேற்று(திங்கட்கிழமை) பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வளத்தாப்பிட்டி இஸ்மாயில் புரம் பொது மக்களினால் இப் போராட்டமானது (காலை 9.30 முதல் 10.20 வரை) நடைபெற்றது.

இதன் போது கர்ப்பிணி பெண்கள், நோயாளிகள் , பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக செல்வோர், கூலித்தொழிலாளிகள் போன்றவர்கள் செல்வதற்கு ஒழுங்கான பாதை இல்லை எனவும், மக்களின் வாழ்வாதாரம், விளையாட்டு மைதானம், வாசிகசாலை, வைத்தியசாலை போன்றவற்றை அமைத்துத் தருமாறும், சுனாமி வீட்டு திட்டத்தின் உறுதியையும்மற்றும்காணிகளின்உறுதிகளையும் பெற்று தர வேண்டும் என போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறிப்பாக இந்த வீதியின் நீளம் சுமார் 1.5 கிலோ மீற்றர் ஆக காணப்படுகிறது. இந்த வீதியில் பள்ளிவாசல், முஸ்லிம் மையவாடி, பாடசாலை , சந்தை தொகுதி, பொதுமக்களின் அன்றாட போக்குவரத்து பாதையாக இது காணப்படுகிறது.

பொது மக்கள் சிலர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது - 2008 ஆண்டிற்குப்பிறகு இருந்து இது வரை எந்த அபிவிருத்தியும் இங்கு இடம் பெறவில்லை.

அரசியல் வாதிகள் பல வீதிகளை அபிவிருத்தி செய்கின்றனர் ஆனால் ஏன் இந்த வீதியை அபிவிருத்தி செய்ய முடியாமல் உள்ளது?,

காட்டு யானைகள் வந்து எங்களது வீடு மற்றும் பயிர் செய் நிலங்களை அளிக்கின்றது.

அதுமட்டுமின்றி வைத்தியசாலைக்கு செல்வதாக இருந்தால் சம்மாந்துறைக்கு அல்லது அம்பாறைக்கு செல்ல வேண்டும் இது பகல் நேரத்தில் என்றால் பஸ்களில் செல்லலாம் இரவு வேளையில் செல்லுவதற்கு முச்சக்கரவண்டிகளுக்கு தொலைபேசி எடுத்தால் சிலர் 'பாதை சரி இல்லை இதனால் நாங்கள் வர முடியாது' என்று கூறுகின்றனர். சிலர் உரிய நேரத்திற்கு வராது தாமதமாக வருவதால் உயிர் இழப்புக்களும் ஏற்படுகிறது. பஸ்களில் மாணவர்கள் பிரத்தியேக வகுப்புகளுக்கு செல்லுவதற்கு சென்றால் பஸ்களை சாரதிகள் நிறுத்தாமல் செல்லுகின்றனர் இதனால் மாணவர்களின் வகுப்புகள் தடைப்படுகின்றது இதனால் எங்களுக்கு பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைத்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

# குருநாகல் பிங்கிரிய ஏற்றுமதி வலயம் ஜனாதிபதி ரணிலால் திறந்து வைப்பு

## ஆளுநர் நஸீர் அஹமட் பங்கேற்பு

குருநாகல் மாவட்டத்தின் பிங்கிரிய பிரதேசத்தில் ஏற்றுமதி அபிவிருத்தி வலயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமேல் மாகாண ஆளுனர் நஸீர் அஹமட் கலந்து கொண்டார். வடமேல் மாகாணத்தை சகல வளங்களும் பொருந்திய, பொருளாதார மேம்பாடு கொண்ட மாகாணமாக மாற்றியமைக்கும் ஆளுனர் நஸீர் அஹமட் அயராத முயற்சிகளுக்கான ஓர் அங்கீகாரமாக இந்த ஏற்றுமதி அபிவிருத்தி வலயம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதேசத்தில் புதிதாக ஒரு பாரிய ஆடைத்தொழிற்சாலையும் ஜனாதிபதி மற்றும் ஆளுனர் ஆகியோரின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

பிங்கிரிய ஏற்றுமதி வலய அபிவிருத்திப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல் முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது வடமேல் மாகாணத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கான செயற்திட்டங்கள் குறித்து ஆளுனர் நஸீர் அஹமட் பல்வேறு கருத்துக்களை முன்வைத் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் முதலீட்டு அபிவிருத்தி ராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, உள்நாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, ஊடகத்துறை ராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் இலங்கை முதலீட்டுச்சபையின் அதிகாரிகள், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (05)

# 'நாய்பட்டிமுனை' என்ற பெயர் 'நற்பிட்டிமுனை' என மாற்றம்

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவில் கல்முனை பிரதான அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நாய்பட்டிமுனை உப அஞ்சல் அலுவலகம் 2024.04.02 அன்று தொடக்கம் நற்பிட்டிமுனை உப தபாற் கந்தோர் என்று பெயராக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அஞ்சல் அலுவலக உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு நற்பிட்டிமுனை அனைத்து பள்ளிவாசல் தலைவர் ஜெ.எம்.றிஸான் (ஹாமி) உட்பட நிர்வாகிகள் கொண்டு வந்ததை தொடர்ந்து 2024.05.31 திகதி வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக குறித்த பெயர் மாற்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி குறித்த உப தபாற் கந்தோரின் பழைய விளம்பர பலகை அஞ்சல் மா அதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ. எம்.ஆர்.பி. சத்குமாரவின் உத்தர விற்கமைய அகற்றப்பட்டு புதிய விளம்பரப்பலகை தற்போது பொருத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய இனிவரும் காலங்களில் நற்பிட்டிமுனை உப தபாற் கந்தோர் என அழைக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த செயற்பாட்டை முன்னெடுத்த நற்பிட்டிமுனை அனைத்து பள்ளிவாசல் தலைவர் உட்பட பலருக்கு நற்பிட்டிமுனை பொதுமக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (05)

# சம்மாந்துறை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் அணிவகுப்பு



(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் 2024 ஆம் ஆண்டிற்கான அரையாண்டு அணி வகுப்பு மரியாதை மற்றும் பரிசோதனை அண்மையில் பொலிஸ் நிலைய மைதானத்தில் இடம்பெற்றது.





சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜெயலத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என்.ஜயபத்ம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு மரியாதையை பார்வையிட்டு ஏற்றுக்கொண்டார்.

மேலும் பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவைப் பிரிவு நிலையங்கள், சுற்றுச்சூழல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்குமிட அறைகள் என்பவற்றைப் பார்வையிட்டதுடன், பொலிஸார் பயன்படுத்தும் வாகனங்களையும் பரிசோதனை மேற்கொண்டார்.

மேலும், இந்நிகழ்வில் சம்மாந்துறை, பெரியநீலாவணை, சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொலிஸாரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# பொலன்னறுவையில் கெப் விபத்து : ஒருவர் உயிரிழப்பு: ஐவர் படுகாயம்

பொலன்னறுவை, வெலிகந்த சிங்கபுர பகுதியில் பயணித்த கெப் வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தில் மோதியதில் கெப் வண்டி சாரதி உயிரிழந்துள்ளதுடன் ஐவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றுள்ளது. விபத்துக்குள்ளான கெப் வண்டியில் ஆறு பேர் பயணித்துள்ளனர். விபத்தில் கெப் வண்டி சாரதி உயிரிழந்ததுடன், ஏனைய ஐவரும் காயமடைந்து பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த சாரதி சூரியவெவ சிங்கபுரவைச் சேர்ந்த 54 வயதுடையவர் ஆவார்.

காயமடைந்தவர்கள் 21 முதல் 25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் வெலிகந்த சூரியவெவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்ற வழக்கு ஒன்றுக்காக பொலன்னறுவை நோக்கிப் பயணித்த கெப் வண்டி ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன. (05)

# போலி வைத்தியரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த உத்தரவு

வைத்தியசான்றிதழ் இன்றி இரு சிறுவர்களுக்கு சிகிச்சை அளித்தார் என்று கூறப்படும் போலி வைத்தியரை கைது செய்து உடனடியாக நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு வெல்லம்பிட்டி பொலிஸாருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனுவெல நேற்று (திங்கட்கிழமை) உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தும் சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை என குறித்த சிறுவர்களின் தந்தை வழங்கிய வாக்குமூலத்தை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

வெல்லம்பிட்டியில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் வைத்தியர் இல்லாத சந்தர்ப்பத்தின் போது சிறுவர்களுக்கு சிகிச்சை அளித்ததாக கூறப்படும் நபரொருவரை கைது செய்யவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆனமடுவ ஜயசூரிய மகா வித்தி. மாணவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற ரணில் நடவடிக்கை



ஆனமடுவ ஜயசூரிய மகா வித்தியாலய மாணவர்கள் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து சிநேகபூர்வமாக உரையாடினர்.







மிகவும் வேலைப்பளுவில் இருந்த போதிலும், ஜனாதிபதி அந்த மாணவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் கல்விப் பணிகள் குறித்து கேட்டறிந்ததோடு, மாணவர்கள் தமது கல்லூரியின் சில குறைபாடுகள் குறித்து ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

பாடசாலைக்கு குடிநீர் வசதிகளை வழங்கும் நீராதாரம் மிகவும் உப்புத்தன்மை கொண்டதாக காணப்படுவதால், தற்போது கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டமைப்பை துரிதமாக நிர்மாணித்து தருமாறு மாணவர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதற்குத் தேவையான பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், பாடசாலைக்குஸ்மார்ட்வகுப்பறையை பெற்றுக்கொள்ளல், கணினிகள், அழகியல் பிரிவுக்கான கட்டடத்துக்கான தேவை என்பன தொடர்பில் மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

காட்டு யானைகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் கல்வியைத் தொடரும் ஆனமடுவ ஜயசூரிய மகா வித்தியாலய மாணவர்கள் சிறந்து விளங்குவதைப் பாராட்டிய ஜனாதிபதி, அவர்களின் எதிர்கால கல்விப் பணிகள் சிறக்க தனது ஆசிர்வாதத்தையும் தெரிவித்தார்.

அதன் பின்னர், மாணவர்கள் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரையும் சந்தித்து சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகள், மாணவர்களின் விளையாட்டு மற்றும் கலைத்திறன்களை மேம்படுத்துவதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய செயற்றிட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

ஆனமடுவ ஜயசூரிய மகா வித்தியாலய அதிபர் லக்ஷ்மன் அபேசிங்க, சில ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.(05)

# கதிர்காம மருத்துவ முகாமில் 4000 யாத்திரிகர்களுக்கு சிகிச்சை

(எஸ்.அஷ்ரப்கான்)

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து நடாத்திய இலவச மருத்துவ முகாமில் நான்காயிரத்துக்கும் மேற்பட்டேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் தொனிப்பொருளில் உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் கடந்த திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை 11 நாள்கள் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இம்மருத்துவ முகாமில் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளதுடன் தங்களுக்குத் தேவையான ஆயுர்வேத மருந்துகளையும் பெற்றுச் சென்றனர்.

இதில் உடல் உபாதைகளை நீக்கக்கூடிய மருந்துகள் மற்றும் உடல் வலிகளைப் போக்கும் ஆயுர்வேத மருந்துகளும், பாம் போன்ற பல மருந்துகளும் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் அக்கரைப்பற்றைச் சேர்ந்த தொழிலதிபர் ஏ.எம்.அப்துல் சலாமின் உதவியுடன் சுமார் 6000 பாதயாத்திரிகர்களின் தாகசாந்திக்கான குளிர்பானமும் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் ஆயுர்வேத வைத்தியர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டு சிறந்த சேவையை வழங்கியதுடன் கல்முனை மற்றும் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் கலந்துகொண்டதாக பிரதி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

கிழக்குமாகாணஆளுநர்செந்தில்தொண்டமானின் பணிப்புரைக்கமைவாக கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர், சுதேச மருத்துவதிணைக்களத்தின்மாகாணஆணையாளர் ஆகியோரின்ஆலோசனைமற்றும்வழிகாட்டலின்கீழ் இம்மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உகந்தை காட்டுவழிப் பாதையூடாக இம்முறை 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதயாத்திரை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(05)

# கருங்கண்டல் பாடசாலையில் திறன் வகுப்பறை திறப்பு







எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸவின் 'பிரபஞ்சம்' நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கருங்கண்டல் பாடசாலைக்கான



இலத்திரனியல்வகுப்பறையைளிக்கும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) காலை நடைபெற்றது.

நாடாளுமன்றஉறுப்பினர்செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கருங்கண்டல் பாடசாலையில் அமைக்கப்பட்ட இலத்திரனியல் மூல வகுப்பறை வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டது.

சஜித் பிரேமதாசவுடன் இணைந்து மடு வலயக்கல்விப் பணிப்பாளர், கருங்கண்டல் பாடசாலை அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைகலநாதனின் பிரதிநிதி வசந்த் ஆகியோரும் இவ்வகுப்பறைகளை திறந்து வைத்தனர்.

மேலும், சஜித் பிரேமதாசவினால் இந்தபாடசாலைகளின்நூலகங்களுக்கு தேவையான ஒரு தொகுதி ஆங்கில புத்தகங்கள் வழங்கப்பட்டதோடு, புதிய நூல்களை கொள்வனவு செய்ய தலா ஒரு லட்சம் ரூபாய் நிதியும் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# மூதூரில் குருதிக்கொடை

மூதூர் நடுத்தீவு கிராமத்தால் நடுத்தீவுவலுவூட்டல்மற்றும்நலன்புரிச் சங்கம்எனும்பெயரில்கிராமவாசிகளின் அமைப்பு கடந்த பல மாதங்களாக கிராமத்திற்கான நலத்திட்டங்களை செய்து வருகின்றது.

அந்தவகையில் 'உயிர் காக்கும் உயரியதானம்' எனும்கருப்பொருளின் கீழ்சனிக்கிழமைமூதூர்தழுவியஇரத்த தானமுகாம்ஒன்றைதிருகோணமலை மாவட்டவைத்தியசாலைஇரத்தவங்கிப் பிரிவுடன்இணைந்துமூதூரின்கலாசார மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில்மும்மதத்தலைவர்கள் உட்பட மூதூர் பொலிஸ், இராணும் மற்றும்கடற்படை உயர் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்திருந்ததோடு மூதூரின் பல பாகங்களிலும் இருந்து வந்து ஏராளமானோர் இரத்த தானம் செய்தனர் .(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.07.2024இல் வெளியிடப்பெற்றது